**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

# P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. யாப்பிலக்கணத்தோடு தொடர்புடையது எது?
2. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற கருத்தைக் கூறியவர் யார்?
3. கவிமணி யாருடைய பாடல்களை மொழிபெயர்த்தார்?
4. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது என்று பாடியவர் யார்?
5. தூது என்பது எவ்வகை இலக்கியம்?
6. கலம்பக இலக்கிய வகையில் முதல் நூல் எது?
7. பெரிய திருமடலை இயற்றியவர் யார்?
8. சிவபெருமானின் கங்கணமாக உள்ள பாம்பின் பெயர் என்ன?

9. விக்கிரம சோழன் உலாவை இயற்றியவர் யார்?
10. பாவேந்தர் பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?
11. எலும்பு மாலை அணிந்த இறைவன் யார்?
12. முதலில் தோன்றிய சதக இலக்கியம் எது?
13. அப்துல் ரகுமானின் முதல் கவிதைத் தொகுப்பு எது?
14. சிற்பியின் கவிதை நாடகம் எது?
15. தமிழ்ப் புதுக்கவிதைக்கு வித்திட்டவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. கவிதையின் தோற்றம் குறித்துச் சுருக்கமாக எழுதுக.
2. மேலை இலக்கியத் தாக்கத்தினால் தமிழ்க் கவிதையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
3. நாமக்கல் கவிஞரின் ஓவியப் புலமையைப் பற்றி எழுதுக.
4. பட்டுக்கோட்டையார் உழவையும், உழவரையும் எவ்வாறு பெருமைப்படுத்துகிறார்?
5. முடியரசனின் கவிதைகளில் காதல் இடம்பெறும் விதம் குறித்துச் சுருக்கமாக எழுதுக.
6. ந.பிச்சமூர்த்தி தம்மைக் காதலியாகக் கற்பனை செய்து பாடிய கவிதை குறித்து எழுதுக.
7. சிற்பி குழந்தைக்குக் கூறும் அறிவுரை யாது?
8. தொன்மம் – குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) 'வானம்பாடி' காலத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்களின் ஆளுமைச் சிந்தனைகளைப் பாரதியார் எவ்வாறு விரித்துரைக்கிறார்?

2. (அ) பாரதிதாசனின் தமிழ்ப்பற்றை விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) கண்ணதாசன் கவிதைகளில் இலக்கியச் சுவை பற்றிக் கட்டுரை வரைக.

3. (அ) மக்களிடையே இறையுணர்வைத் தோற்றுவிக்கத் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உலா இலக்கிய வரலாறு பற்றி விவரிக்க.